உ

ஓம் தத் ஸத்.

குருபரப்பிரம்மணே நம:



தணிகை நிர்மலானந்தம்

க. வேதாசல சுவாமிகளாலியற்றிய

சுயம்பு விநாயகர் அகவலும்

மற்றும் சுவாமிகள்

மாணவருள் ஒருவரால் மலரடிக்கியற்றிய

ஸ்ரீ சற்குரு பதிகமும் அடங்கியது.

சென்னை, சமரச நிலைய சன்மார்க்க சபை,

தண்டபாணி சிவம் என்பவராலும்,

ஆணந்தகோபால் என்பவராலும், நியோகித்தது.

நேஷனல் பிரஸ், பெங்களூர்.

உ

ஓம் தத் ஸத்.

குருபரப்பிரம்மணேநம:

சுயம்பு விநாயகர் அகவல்.

இவை அயன்புரம் ஆருதார விலாச முதலிய
நூலாசிரியர், வித்வான் கன்னிபுத்தூர்,
வேலாயுத முதலியார் குமாரரும்,
மார்க்கண்டேயவர்க்கம், ஸ்ரீமத்
சிவானந்த சுவாமிகள் மாண
வருமாகிய, சென்னை சமரச
நிலைய சன்மார்க்க
சபைத் தலைமை
தணிகை நிர்மலானந்தம்

க. வேதாசல சுவாமிகளால்

இயற்றியது.

1929.

நேஷனல் பிரஸ், பெங்களூர்.

தந்தை தாய் குரு தெய்வம் அடியார் வணக்கம்.

நேரிசை வெண்பா.

தந்தைவே லாயுதநற் ருய்சா னகியம்மை
சிந்தைவரு சற்குருசி வானந்தன்—முந்தை
வினையையறுக் குந்தணிகை வேற்குகன்மெய் யன்பர்
கனைமலர்த்தா ணெஞ்சே நவில்.

ஓம் சாந்தி.

ஓம் தத் ஸத்.

குருபரப்பிரம்மணேநம:

சுயம்பு விநாயகர் அகவல்.

விருத்தம்.

ஓம்கணபதியேபோற்றி ஓம்பராபரனேபோற்றி
ஓம்சடாதாரமூல ஓம்பஞ்சாட்சரனேபோற்றி
ஓம்சிவபுத்ராபோற்றி ஓம்குருநாதாபோற்றி
ஓம்மறைப்பொருளேபோற்றி ஓம்விநாயகனேபோற்றி.

அகவல்.

ஆதியாமூலத் தமர்மணிவிளக்காய்
கோதிலாபாநுக் கோடிப்ரகாசமாய்ப்
பொற்புறவிளங்கும் புண்ணியவடிவே
கற்பகக்களிறே கலையின்மெய்ப்பொருளே
கவனமாய்நின்றன் கடிமலர்ப்பதத்தை
மவுனமாய்த்துதித்து மகிழ்ந்திடுமெய்யன்
படியவர்முன்னின் றக்கணமலக்க
ஞெடிதனிற்றவிர்க்கு நுண்ணியமுதலே
சச்சிதானந்த ஸம்புடபதமா
மூச்சிதானந்த வோங்காரரூபா
தூயகொன்றைத் தூரிசறுதும்பை
நேயவெருக்கு நீள்கூவிளநீர்
நிலவணிவேணி நிருத்தன்புதல்வநின்
னலதொருதெய்வ மகிலத்திலையென

வயமுறவிண்ணவர் மண்ணவரேத்தத்
துவமறவெழுந்த தூரியசுடரே
சித்திபுத்தித் தேவிவல்லபைச்
சத்திமுதற்பல சத்திக்கிறைவா
தீனரட்சகா சிவமெய்ஞ்ஞான
மோனமளிக்கு மூலாதாரனின்
பெருமணியிழைத்தப் பெட்புறுமகுடமுங்
கருணைமுகமுங் கடைக்கணேக்கமுந்
திருநுதற்கண்ணுஞ் சிந்தூரமுகமும்
பொருவெண்கோடும் புழைக்கைநாசியு
மெழிற்பெருங்கவச மிலங்கிருசெவியு
மழுந்தப்பூசி யமர்நீற்றொளியுஞ்
சந்தனப்பொட்டின் றளதளச்சொலிப்புஞ்
சிந்தூரப்பொட்டின் சிறந்தநன்மணமுஞ்
செச்சைமேவுந் திடநாற்புயமு
முச்சிதவிரத்தின வொண்மணிப்பதக்கமு
மங்குசபாசமு மாம்பிண்டிபாலமுந
தங்கியசூலமுந் தரித்தவைங்கரமும்
பொன்னூற்செய்முப் புரிநூன்மார்பு
மன்னசுக்கில வம்பரவாடையுந்
தாகிடகிடகிட தகுதித்தோவென
மாகிரியெட்டு மற்றையண்டமு
மதிரநடேங்கிட ஆகுவாகனத்தற்
புதநடம்பயிலும் பொற்புறுகாக்ஷியுந்
தண்டையுங்கொலுசுஞ் சதங்கையுமணிந்துப்

புண்டரீகத் தினைப் பொருந்துபொற்பாதமும்
பேழைவயிறும் பெருத்தநின்கீர்த்தியு
மேழைபுன்னுவா லிசைக்கவுந்தகுமோ
தும்புமடியவர் நாயகாசரணம்
தும்பிமுகங்கொள் தூயவாசரணம்
மிடிகளைப்போக்கு மேலவாசரணம்
அடியேன் வினையை யறுப்பாய்சரணம்
கந்தனைப்புயத்தணைக் கரிமுகாசரணம்
எந்தமையாளு மிறைவாசரணம்
மாதங்கமுக மணியேசரணம்
வேதங்கடந்த விமலாசரணம்
பொய்யாய்க்கனவாய்ப் போமிவ்வாழ்க்கையை
மெய்யாயெண்ணி மேவிடும்பதகனை
புலைகொலைகளவிற் புக்குழல்பவனை
ஞானசாதனமு நற்சிரவணமு
மேனவிற்பெரியோர் மேவியசங்கமுந்
தினைத்துணையும்மிலாச் சிதடனைக்கசடனை
வினையனைச்சனியனை விவேகமில்லவனைக்
கலனைநம்பிக் காகஞ்செலவக்
கலனடுக்கடலிற் கவிழவக்காகம்
நெஞ்சுட்பயந்து நிற்பதற்கிடந்தான்
கொஞ்சமுமின்றிக் கூவிச்சுற்றி
யரற்றிடுமாபோ லந்தோமர்யைக்
கருங்கடலதனுட் கலங்கித்தவித்திடர்ப்
படுங்கடையவனைப் பவபயமகலத்

திடமுடனுவந்துத் தெரிசனந்தந்து
சேவடிவைத்துச் சிந்தையும்வைத்திங்
காவலித்தருட்கண் ணதனினுநோக்கித்
தொந்தத்தசிபதந் தோமறவுணர்த்தி
மைந்தனையாள்குரு மணியேபோற்றி
ஐயாபோற்றி யரசேபோற்றி
துய்யாபோற்றித் துணைவாபோற்றி
போற்றிபோற்றிப் பொன்னடிபோற்றியென்
றேற்றிப்பணியு மெளியேற்கிரங்கிச்
சாகாக்காலும் வேகாத்தலையும்
போகாப்புனலும் புகல்மயிர்ப்பாலமு
மக்கினியாறு மருந்தாவுணவு
மொக்கச்செருகி வுடுக்காத்துகிலு
முடையாப்பாயு மூச்சைவிடுத்துப்
படுத்துத்தூங்காப் பாங்குளதூக்கமு
நினைவற்றுன்னை நினையுநினைவும்
புனைமலர்ச்சொல்லாற் புகலாதுபுகல்
சொல்லுமெண்ணுச் சூக்குமமனுவு
மெல்லாமுணர்த்தி யெனக்கருள்செய்ய
வருகவருக வள்ளலேவருக
வருகமூஷிக வாகனவருக
முக்கோணத்தின் முதல்வனேவருக
அக்கணிமெய்ய னருட்சுதவருக
புங்கவர்போற்றும் பொருளேவருக
மங்களபிரணவ மகிபாவருக

பூரவியேன் வினையைப் பரிக்கவேவருக
ஆவியேவருக வமுதேவருக
அகமேவருக அறிவேவருக
சுகமேவருகத் துரியமேவருக
இகமேவருக வின்பமேவருக
விந்துநாத விளைவேவருக
மந்திரபிரணவ வடிவேவருக
அனற்பதிவருக அழற்பதிவருக
கனற்பதிவருகக் கணபதிவருக
பணபதிவருகப் பரசிவவருக
குணநிதிவருகக் குன்றேவருக
குருகுகேசனைக் குலவடியவரைத்
திருவுளநோகத் தீயனசெய்யு
நல்லாரல்லார் ஞானமேயில்லார்
பொல்லாநரகம் புகுமவர்த்தொழிலாம்
பில்லிசூனியம் பெருத்தவைப்பேவல்
வல்லவசியம் வயங்குந்தம்பனம்
மோகனம்பேதன முடிவாமாரண
மாகியபார்வைக ளதுவுமிராட்சசப்
பூதப்பிசாசு புரிசடாமுனிநன்
நீதத்தவமுனி நீண்டவாள்முனி
மாடன்கறுப்பன் மாகுட்டிச்சாத்த
னுடெங்குறளி யவைமுதற்றேவதைக்
கோளுங்குன்மமுங் மூலநோய்ச்சூலையும்
நாளும்வருத்தி நலிசெய்காசமு

மேகமுங்குலைப்பு மீளாச்சுரமுஞ்
சோகமுமூர்ச்சையுஞ் சுகசன்னிமண்டை
குத்துங்குடைச்சலுங் குடல்வாதம்முத
லெத்தியநாலா யிரத்துநானூற்று
நாற்பத்தெட்டாய் நவிலும்பிணியுண்
மேற்பற்றிவருத்து மிகுமரணப்பிணித்
தொடக்கையுமறுத்துத் தொல்லைவினைதீர்த்
தடியரைப்புரக்கு மருளேவந்திடு
வந்திடுவந்திடு வரதனேவந்திடு
தந்திடுதந்திடு தரிசனந்தந்திடு
சித்திகளெட்டுந் திகழத்தந்திடு
சத்திவல்லபைச் சமேதனேவந்திடு
சருமலமொழிக்குங் கடவுளேவந்திடு
நிருமலன்நெஞ்சு ணினைவேவந்திடு
வித்தவிநாயக விக்னவிநாயக
முத்திவிநாயக மூலவிநாயக
ஆதிவிநாயக வமலவிநாயக
சோதிவிநாயக சுமுகவிநாயக
நயம்புரிவிநாயக ஞானவிநாயக
சுயம்புவிநாயக துணையடிநமஸ்தே.

சுயம்பு விநாயகர் அகவல் சிவசம்பூர்ணம்.

ஓம் சாந்தி.

ஓம் தத்ஸத்.
ஓம் நிர்மலம் ஆனந்தம்.



ஸ்ரீ சற்குரு
வேதாசலேசர் பதிகம்.

பாயிரம்.

ஆனைமாமுகனேமூலத் தமர்கணபதியேபோற்றி
மானிடமழுவலஞ்சேர் மகேச்சுரபுத்ராபோற்றி
தானெனுமகங்காரப்பேர் தந்தமதொடித்தாய்போற்றி
தீனனேன்செய்தபாவந் திருத்தியாள்குருவேபோற்றி. 1.

மும்மலமென்றுசொல்லு முப்புரமெரித்தாய்போற்றி [ற்றி
கொம்மைமென்முலையாள்பாகங்கொண்டெழுந்தவனேபோ
செம்மைபொன்னம்பலத்திற் றிருநடஞ்செய்வாய்போற்றி
அம்மையேயப்பாவென்னை யாண்டநாயகனேபோற்றி. 2.

சற்குருவுருவாய்வந்த சரஹணபவனேபோற்றி
அற்புறமடியர்காண வக்கணம்வருவாய்போற்றி

சொற்பரசாந்தபோத சொரூபமேனியனேபோற்றி
தற்பரஞானசித்த சாமியேபோற்றிபோற்றி. 3.

பத்தியைப்பயக்கும்வேலே பார்வதிக்குழந்தைவேலே
சித்தியையளிக்கும்வேலே சின்மயிலேறும்வேலே
எத்திசைபுகழும்வேலே விரத்தினமணிப்பொன்வேலே
முத்தியிற்கூட்டும்வேலே முத்திவேல்முத்திவேலே. 4.

மதம்பெறுகளிறுவந்து வணங்குவதுண்டோமேலவ் [ம்
விதம்பெறுங்கடையனேன்புன் வீறழித்தொழித்துத்தம்பூ
பதம்பெறுநிழலிருக்கப் பணித்தருணிமலன்றன்னைக்
கதம்பெறுமமதைநீங்கிக் கருத்தினுளிருத்திவாழ்வாம். 5.

பாரின்பந்தன்னைவேண்டிப் பாழ்பிறவியிற்புகாதுப்
பேரின்பவீட்டைநல்கப் பிரம்மவுபாயங்காட்டி
நேரின்பமருளுஞான நிமலவேதாசலன்றன்
ஓரின்பமலர்ப்பொற்பாத வுண்மைகண்டுணர்வில்வைப்பாம்.

தருமலப்பாசபந்தந் தவிரவேழ்நிலத்துக்கப்பால்
வருநிலத்துயர்மெய்ஞ்ஞான வாழ்க்கையீந்தருளுஞ்சுத்த
நிருமலச்சுகவானந்தம் நிலவுவேதாசலன்மெய்த்
திருமலர்ப்பாதமென்றுஞ் சித்தத்துஞ்சிரத்துமவைப்பாம்.

சித்துருவென்னத் திகழ்ந்தொளிர்சீவன்
முத்தர்களடியெம் முடிக்கணியாமே.

பாயிரம் சிவசம்பூர்ணம்.

ஓம் சாந்தி.

உ

ஓம் தத் ஸத்.

ஓம் நிர்மலம் ஆனந்தம்.

ஸ்ரீ சற்குரு

வேதாசலேசர் பதிகம்.

கணபதி வணக்கம்.

நேரிசை வெண்பா.

ஏர்பூத்த வேதாச லேசர்திருப் பொற்ருண்மேல்
சீர்பூத்த நற்பதிகஞ் செப்புதற்கு—நீர்பூத்த
சங்கரிதன் றங்கைசிவ சங்கரியீன் றிட்டமத
வெங்கரிமுன் னின்றருளு மே.

கலிவிருத்தம்.

நீயேகுரு நீயேசிவம் நீயேபரம் நீயேயெனச்
சேயேநின தடித்தாண்மலர் சிந்தித்துவந் தனைசெய்குவேன்
தாயேயெனக் கருணைக்கொடு ததிவந்தருட் பெறநல்குவாய்
வேயாருதோ ளுமைபங்கனே வேதாசலா வேதாசலா. 1.

கண்ணுகினுய் மணியாகினுய் கதிராகினுய் மதியாகினுய்
பண்ணுகினுய் மறையாகினுய் பலவாமுயிர்க் குயிராகினுய்
மண்ணுகினுய் நீராகினுய் மற்றுங்கனல் வளியாகினுய்
விண்ணுகினுய் யொளியாகினுய் வேதாசலா வேதாசலா.

பூசிப்பது முன்பாதமே புகழ்ச்சிப்பது முன்பாதமே
ஆசிப்பது முன்பாதமே அளிகூர்வது முன்பாதமே
நேசிப்பது முன்பாதமே நினைவுற்றது முன்பாதமே
வீசப்பெறுந் திரைவேணியாய் வேதாசலா வேதாசலா.

வையஞ்சதஞ்சதமென்னவும்வாழ்க்கைச்சதஞ்சதமென்னவு
மையற்றரு மனமாயையான் மயங்கிப்பொறி வழியேயலைந்
துய்யுநெறி யிலனென்னினு முணர்வூட்டிட வுயர்ஞானநன்
வெய்யோனென வந்தாண்டவா வேதாசலா வேதாசலா.

மனமென்னுமர்க்கடமாய்ப்புலன் மரமேறிபொய்விடயாதி
யாங், கனியுண்டுபோதைப்போக்கியே கடைப்பட்டுழல்வே
னென்னினு, மினமானநின்னடியார்கட மெழிலார்திருத்
தொண்டுந்துதீ, வினைபோக்கியேயெனக்காரையா வேதா
சலா வேதாசலா.

பித்தாமுலகத்தாசையால் பேய்போற்றிரிந்தலைந்தேடணைக்
கொத்தாலுழல்வேனென்னினுங்கோமானுனைமறப்பன்கொ
சித்தாகியுஞ் சடமாகியுஞ் செகசீவநற் பரமாகியும் [லோ
வித்தாகியும் விளைவானவா வேதாசலா வேதாசலா.

ஐயாநின தம்பொன்னடி யதையன்றிவே றெதைநாடுவேன்
மெய்யானதே சிகநாதனே மேலாம்பவ மென்னும்வினைப்
பையானசஞ்சிதமியாவுந்தீப் பஞ்சாகவேயருட்பார்வையால்
வீயக்களைந் தடியேனையாள் வேதாசலா வேதாசலா.

கோணுகமியானியானென்னவேகோடுவோணவமலமாதியால்
நாஞூஞமே வாணுளவீ ணுளாக்கியே நவையேயுல
கூணுதிவா தனையாலழி வுற்றுண்டுறங் கிடுவஞ்சக
வீஞூனபா வியைக்கைவிடேல் வேதாசலா வேதாசலா.

அரவன்றிது கயிறென்றுமு னறிவித்தவக் கதைபோலவே
புரமன்றுபூ ரணநீயெனப் புந்திக்குணின் றுணர்த்துங்குரு
பரனேசரண் பதியேசரண் பண்பேசரண் அன்பேசரண்
விரதாசரண் வரதாசரண் வேதாசலா வேதாசலா.

சமபாவனை யறிவுந்திகழ் சந்தோடமுங் கொண்டுய்ந்திட
வமர்நற்பதியதனுண்மையையடுத்தேயெடுத்தெடுத்தோதி
யுச், சிமயபெருங்குவட்டின்மிசை சேர்த்தேவினைதீர்த்தே
யருள், விமலாவமலாநின்மலா வேதாசலா வேதாசலா.

உயிரென்னதென்றுடலென்னதென்றுலவுங்கருந்தனமெ
ன்னதென், றியையச்சிவார்ப் பணம்வாங்கியே விகல்தத்துவ
மசிவாக்கிய,நியமம்பெறு சுகநின்மலம் நிலவும்படிக் கருணல்
கிடும், வியன்ரத்தினப் பணிகொண்டவா வேதாசலா வேதா
சலா.

பதிகம் சிவசம்பூர்ணம்.

ஓம் சாந்தி.

எச்சரிக்கை.

சிவமோருருவெனவேவரு திருவேயருட்குருவே
பவமேதவிர்த்தெனையாண்டருள் பரமே எச்சரிக்கை.

மகதத்துவமசிவாக்கிய மறையின்பொருள்முடிவை
அகமேதெளிவுறவோதிய வறிவே எச்சரிக்கை.

பரமேபரம்பரமேசிதம் பரமேகுருசிவமே
சிரமேவிருதயமேவளர் சின்மயா எச்சரிக்கை.

செறிமும்மலவிருணீங்கிடத் திசழ்மெய்த்தினகரனாய்
குறிகொள்வடிவெனமேவுசற் குணனே எச்சரிக்கை.

அருளார்கரமிருத்திச்சிர மன்புமுளத்திருத்தி
வெருவும்வினைத்தொடராதுசெய் வித்தா எச்சரிக்கை.

திகழ்தத்பதத்தொளிர்லட்சியத் திடங்கொண்டகம்ப்ரம்ம
சுகப்பேறினிதருண்ஞானநற் றுறையே எச்சரிக்கை.

முப்பாழ்கடந்தப்பார்வையில் முழுதமறிவாக்கு
மப்பாவெனதையாவரு ளன்பே எச்சரிக்கை.

பூண்டேபுலநெறிமேற்செலும் புலையேன்றனையறிவி
ஞண்டேதிருவடிக்காக்கிய வரசே எச்சரிக்கை.

குபுத்திக்கொடுதிரியுங்கடைக் குலத்தாருறவிட்டே
சுபுத்திக்கொடுவுனைநாடுவன் சுகுணா எச்சரிக்கை.

எணியேசொலற்கரிதாம்பிறப் பிறப்பிற்சுழல்பவப்பொய்ப்
பிணியேயறவெனையாண்டருள் பிரானே எச்சரிக்கை.

இருளார்கலிவீழ்ந்தேகிடந் தேங்குமெனையடுத்தே
அருளார்கரையினிதேற்றிய வாதி எச்சரிக்கை.

மலமிற்றழிந்திடச்சொல்லொரு மாவாக்கியமுடிவின்
நிலைபெற்றிடவெனைத்தேற்றிய நித்தா எச்சரிக்கை.

சம்புசிவபரமென்றொரு சங்கற்பமுமின்றி
நம்பியுனையடைந்தேன்குரு நாதா எச்சரிக்கை.

மாயைக்குவலயமீதினில் மண்ணைப்பொன்னையெண்ணி
மாயாதருண்மாபாவியை மணியே எச்சரிக்கை.

எண்ணுநினைவெல்லாம்நினை யெண்ணும்நினைவாகப்
பண்ணுஞ்சிவபுரனேபரம் பரனே எச்சரிக்கை.

உடற்காவலைவிடுத்தேயரு ளுண்மைக்கடைப்பிடித்தே
திடபாவனைகொண்டுய்ந்திடச் செய்தாய் எச்சரிக்கை.

உண்மைச்சிவம்நீசிவனன் றுணர்வித்ததுவாக்கும்
வண்மைக்குருபரதேசிக வள்ளால் எச்சரிக்கை.

உனையேவினைவகமுமரு ளுணர்வுமுன் றன்பணியுந்
தனைவேண்டினன்னின்சன்னிதி தற்பரா எச்சரிக்கை.

மார்க்கண்டனன்மரபிற்றிகழ்ப் பேர்க்கொண்டொளிர்ரத்ன
நேர்க்கண்டெழுந்தெனையாண்டருள் நிதியே எச்சரிக்கை

கமலாலயவடிக்கேசெயுங் கைம்மாறெதுங்காணேன்
நிமலாசுகவேதாசல நிபுண எச்சரிக்கை.

போதாசலசுக பூரணநிருமல
வேதாசலகுரு வியன்பதநமஸ்தே.

வாழி விருத்தம்.

மார்க்கண்ட வர்க்கம்பூத்து வளர்சிவா னந்தன்வாழி
ஆர்க்கண்ட நிமலவேதா சலகுரு வருளும்வாழி
சீர்க்கண்ட முத்தர்மற்றுஞ் சிறந்தசா தனங்கள்வாழி
பார்க்கண்ட பதிகமோங்கிப் பரவியே வாழிவாழி.

வேதாசலேசர் பதிகம் சிவசம்பூர்ணம்.

ஓம் சாந்தி.

இப்புத்தகம் வேண்டுவோர் :—

சென்னை

திருவல்லிக்கேணி, திருவேட்டீஸ்வரன்பேட்டை

சமரச நிலைய சன்மார்க்க சபையிலும்,

பெங்களூர் கண்டு

சடாட்சரஞான சிவசுப்ரமண்யர் ஆலய

அடியார் மடாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்.